## வரையறுக்கப்பட்ட நெட்வேல்த் செக்யூரிடீஸ் கம்பனி - 2016

வரையறுக்கப்பட்ட நெட்வேல்த் செக்யூரிடீஸ் கம்பனியின் (“கம்பனி”) 2016 திசெம்பர் 31 இல் உள்ளபடியான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளையும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன.

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் இந்த அறிக்கை வழங்கப்படுகின்றது.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் சபையின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென சபை நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு பணிப்பாளர் சபை (“சபை”) பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றியகணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கம்பனியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டு மொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக் கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

கம்பனியின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 ஏனைய விடயம்

வரையறுக்கப்பட்ட நெட்வேல்த் செக்யூரிடீஸ் கம்பனியின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் பொதுத் தொழிலிலுள்ள மற்றுமொரு பட்டயக் கணக்காளர் நிறுவனமொன்றினால் கணக்காய்வு செய்யப்பட்டு 2016 மே 27 ஆந் திகதி அவர்கள் அந்த நிதிக்கூற்றுக்கள் மீது கலங்கமற்ற அபிப்பிராயமொன்றை தெரிவித்திருந்தனர்.

### 2.3 ஏனைய சட்டரீதியான மற்றும் நியதிச்சட்ட தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 163(2) ஆம் பிரிவினால் வேண்டப்பட்டவாறு, நான் பின்வருவனவற்றைக் குறிப்பிடுகின்றேன்:

(அ) அபிப்பிராயத்திற்கான அடிப்படையும் கணக்காய்விற்கான நோக்கெல்லை மற்றும் வரையறைகளும் மேலே குறிப்பிடப்பட்டவாறாகும்.

(ஆ) எனது அபிப்பிராயமாவது:

(i) எனது கணக்காய்விற்குத் தேவைப்பட்ட எல்லாத் தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என்பதுடன், எனது பிரிசோதனைகளிலிருந்து இது வரை தென்படுகின்றவாறு கம்பனியினால் பொருத்தமான கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தன.

(ii) கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 151 ஆம் பிரிவிலுள்ள தேவைப்பாடுகளுடன் இணங்குகின்றன.

## 2.4 சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களிற்கான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 2015 இன் 09 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச்சட்டத்தின் 32(1) ஆம் பிரிவு | 2008/2009 இலிருந்து ஆரம்பிக்கின்ற கடந்த ஐந்து மதிப்பீட்டு ஆண்டுகளிற்காக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திடமிருந்து ரூபா 270,368,574 கூட்டுத்தொகைக்கான வருமான வரி மதிப்பீடுகள் கம்பனிக்கு கிடைத்திருந்த போதிலும், அந்த வரியினை உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பிவைப்பதற்கு 2017 திசெம்பர் 27 ஆந் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதன் விளைவாக, கொடுப்பனவு தாமதத்திற்காக ரூபா 126,061,875 தொகையான 50 சதவீத தண்டப்பணம் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் விதிக்கப்பட்டிருந்தது. இருப்பினும், இது நிதிக்கூற்றுறுக்களிற்கான குறிப்பொன்றாக வெளிக்காட்டப்பட்டதனைத் தவிர வரிப் பொறுப்பிற்காக எந்தவொரு ஏற்பாட்டினையும் கம்பனி மேற்கொண்டிருக்கவில்லை. |
| (ஆ) அரசாங்க கொள்வனவு வழிகாட்டல்கள் | கம்பனி அரசாங்க கொள்வனவு வழிகாட்டல்களுடன் இணங்கியொழுக வேண்டிய போதிலும், அதனுடன் இணங்கியொழுகியிருக்கவில்லை. |
| (இ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1 ஆம் பந்தி | கம்பனி உருவாக்கப்பட்டது முதல் கூட்டிணைந்த திட்டமொன்று அதனால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) கம்பனி அகவிதியின் 75 ஆம் பிரிவு | ஐந்து பணிப்பாளர்களில் மூவர் 2016 திசெம்பர் 31 ஆந் திகதி அவர்களது பதவிகளிலிருந்து விலகியிருந்தனர். இருப்பினும், 2017 சனவரி 23 ஆந் திகதி வரையிலும் புதிய பணிப்பாளர்களை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1. நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2016 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான கம்பனியின் நிதி விளைவுகள் முன்னைய ஆண்டிற்கான நேரொத்த ரூபா 200,080,851 நட்டத்துடன் ஒப்பிடுகையில் ரூபா 499,587,470 நட்டத்தினை விளைவித்திருந்தமையால், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் நிதிசார் விளைவுகளில் ரூபா 299,506,619 பின்னடைவைக் காட்டுகின்றது. பாதகமான சந்தை நிலைமைகள் காரணமாக முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் முதலீட்டு வருமானம் ரூபா 594,855,612 ஆல் குறைவடைந்தமையே மீளாய்வாண்டிற்கான நிதி வளைவுகளின் இந்த பின்னடைவிற்கு பிரதான காரணியாக பங்களித்திருந்தது.

## 4 செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 முகாமைத்துவச் செயற்பாடுகள்

காசு வெளிப்பாய்ச்சல்களைக் குறைப்பதன் மூலம் சந்தைக் கேள்வியினை பூர்த்தி செய்வதற்கு சந்தைப்படுத்தல் உபாயங்களை உரிய விதத்தில் நடைமுறைப்படுத்துவதற்கு கம்பனி தவறியிருந்தமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. அதேவேளை, உறுதியான சேவைநாடுநர் பின்புலமொன்று கம்பனியினால் உருவாக்கப்பட்டிருக்கவில்லை. ஆகையால், 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் கம்பனி ரூபா 699.67 மில்லியன் திரண்ட நட்டமொன்றை ஈட்டியிருந்தது.

### 4.2 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கம்பனி முதலாந்தர வணிகரொருவராக 2003 இல் இலங்கை மத்திய வங்கியிடம் பதிவுசெய்திருந்தது. மஹபொல நம்பிக்கைப்பொறுப்பு நிதியத்திற்கும் நெஷனல் வேல்த் கோபரேசன் இற்கும் இடையே கைச்சாத்திடப்பட்டிருந்த உடன்படிக்கையின் 2.1 ஆம் பிரிவின் பிரகாரம், எல்லா முதலீட்டுத் தீர்மானங்களும் நம்பிக்கைப்பொறுப்பினால் நியமிக்கப்பட்ட முதலீட்டுக் குழுவினாலேயே எடுக்கப்படுதல் வேண்டும். இருப்பினும், தேவைப்பாட்டிற்கு முரணமாக கம்பனியின் முன்னாள் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தரும் பிரதான வணிகரும், வரையறுக்கப்பட்ட ரிலியன் செக்யுரிடீஸ் (தனியார்) கம்பனி மற்றும் வரையறுக்கப்பட்ட வீர்சுவல் இன்வெஸ்ட்மென்ட் என்ட் டிரேடிங் (தனியார்) கம்பனி ஆகியவற்றில் மறுகொள்வனவு கொடுக்கல் வாங்கல்களை செயற்படுத்துதல் தொடர்பான முதலீட்டுத் தீர்மானத்தை எடுப்பதில் சம்பந்தப்பட்டிருந்தனர். மேலும், இது தொடர்பில் எந்தவொரு அங்கீகாரமும் பெறப்பட்டிருக்கவில்லை. அதனைத்தொடர்ந்து, இது தொடர்பில் தடயக் கணக்காய்வொன்றை கம்பனி மேற்கொண்டிருந்ததுடன் தடயக் கணக்காய்வு அறிக்கையின் படி, மேற்படி உத்தியோகத்தர்கள் முறையற்ற கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபட்டிருந்தமை வெளிப்படுத்தப்பட்டது.

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்களும் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) தொடர்புடைய தரப்பினர்களிற்கு எதிராக கம்பனியினால் கணக்காய்வுத் திகதி வரையிலும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டது.

(ii) மேற்படி இரண்டு சேவைநாடுனர்களுடனும் செய்து கொள்ளப்பட்ட மறுகொள்வனவு உடன்படிக்கையின் பிரகாரம் 2009 யூன் 24 ஆந் திகதிய 2009 இன் 01 ஆம் இலக்க உள்நாட்டு திறைசேரி உண்டியல்கள் (முதலாந்தர வணிகர்) பிரமாணங்களின் 11(2) ஆம் பிரமாணம் மற்றும் 2009 யூன் 24 ஆந் திகதிய 2009 இன் 01 ஆம் இலக்க பதிவுசெய்யப்பட்ட பங்குகள் மற்றும் பிணையங்கள் (முதலாந்தர வணிகர்) பிரமாணங்களின் 11(2) ஆம் பிரமாணம் ஆகியவற்றின் படி மறுகொள்வனவு கொடுக்கல் வாங்கல்களிலிருந்து எழுகின்ற சகல தொகைகளையும் குறிப்பட்ட சேவைநாடுநருக்குச் செலுத்துமாறு அறிவுறுத்தி, இலங்கை மத்திய வங்கி (சீபீஎஸ்எல்) 2015 ஆகஸ்ட் 07 ஆந் திகதி கம்பனிக்கு பணிப்புரையொன்றை வழங்கியிருந்தது. இந்த பணிப்புரையினை சீபீஎஸ்எல் மீளப்பெற்றிருக்காமையால் கம்பனி அதற்கமைய செய்றபடுவதற்கான பொறுப்பினைக் கொண்டுள்ளது.

(iii) சீபீஎஸ்எல் இனால் மேற்கொள்ளப்பட்ட பணிப்புரைக்கு எதிராக 2015 ஆகஸ்ட் 18 ஆந் திகதி கம்பனி மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மேன்முறையீடொன்றை செய்திருந்ததுடன் 2015 செப்தெம்பர் 04 ஆந் திகதி வரையிலும் குறித்த பணிப்புரையினை அமுல்படுத்தாதிருக்குமாறு குறிப்பிட்டு இடைக்கால தடை உத்தரவொன்றை மேன்முறையீட்டு நீதிமன்றம் வழங்கியிருந்தது. இருப்பினும், சகல பிரதிவாதிகளினாலும் மேற்கொள்ளப்பட்ட கோரிக்கைகளைக் கருத்திற்கொண்டதன் பின்னர், மேற்குறிப்பிட்ட தடை உத்தரவினை 2016 மார்ச் 29 ஆந் திகதி மேல்நீதிமன்றம் விலக்கிக் கொண்டிருந்தது. அதனைத்தொடர்ந்து, மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட தீர்ப்பிற்குச் சவாலாக 2016 ஏப்ரல் 18 ஆந் திகதி மற்றுமொரு மேன்முறையீட்டை கம்பனி மீயுயர் நீதிமன்றத்தில் மேற்கொண்டிருந்தது. ஆனால், மீயுயர் நீதிமன்றத்தினால் கம்பனிக்குச் சார்பாக எந்தவொரு தீர்ப்பும் வழங்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், கம்பனி தனது தடயக் கணக்காய்வு அறிக்கையினை 2016 திசெம்பர் 27 ஆந் திகதி சீபீஎஸ்எல் இற்குச் சமர்ப்பித்திருந்தது. இருப்பினும், இவ்வறிக்கைத் திகதி வரையிலும் சீபீஎஸ்எல் எந்தவொரு பணிப்புரையினையும் இது தொடர்பில் கம்பனிக்கு வழங்கியிருக்கவில்லை.

(ஆ) அதிகாரமற்ற தரகுக் கொடுப்பனவு

---

இரண்டு தனியார் கம்பனிகளிற்கு (வைட் கிரோவ் ஹோல்டிங் மற்றும் அஸ்ட்ரல் கெபிடல் ஹோல்டிங்) 2014 இல் செலுத்தப்பட்ட ரூபா 19,725,000 தொகையான அதிகாரமற்ற தரகுக் கட்டணம் தொடர்பில் 2016 ஆம் ஆண்டின் போது குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் (சீஐடீ) கம்பனி முறைப்பாடொன்றை செய்திருந்தது. கொடுப்பனவை மேற்கொள்வதற்கு முன்னர் இந்த இரண்டு கம்பனிகளும் நிதிக் கம்பனிகளாக சீபீஎஸ்எல் இல் பதிவுசெய்யப்பட்டிருந்தனவா என்பது குறித்து கம்பனி உறுதிப்படுத்திக்கொண்டிருக்கவில்லை என்பது மேலும் அவதானிக்கப்பட்டது. மேலும், 2016 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் இக்கொடுக்கல் வாங்கலை வெளிப்படுத்துவதற்கு கம்பனி தவறியிருந்தது.